பக்கங்கள் 21

# காலை முரசு

முழக்கம்: 03 வள்ளுவ ஆண்டு 2057 ஆவணி06 வெள்ளிக்கிழமை 22.08.2025 அதிர்வு 21

## ரி - 56 ரகத் துப்பாக்கியால் ஒருவர் சுட்டுப் படுகொலை



பண்டாரகம, துன்போதிய பாலத்துக்கு அருகில் நேற்று வியாழக்கிழமை மாலை 6 மணியளவில் இடம்பெற்ற 02





# சுமந்திரன் செய்வது இனவாத அரசியலாம்

## சீறுகின்றது சிங்கள அரச தரப்பு

“இனவாத அரசியல் பாதையை சுமந்திரன் மாற்றாவிட்டால் வடக்கு, கிழக்கில் அவரது அரசியல் எதிர்காலம் இல்லாமல் போகக்கூடும்.”

- இவ்வாறு பிரதி அமைச்சர் மஹிந்த ஜயசிங்க எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

“சுமந்திரன் அடிப்படைவாதி அல்லர், அவர் நடுநிலைவாதி என்றே நாம் இது வரை காலமும் நினைத்துக்கொண்டிருந்தோம். ஆனால், நடுநிலை என்ற போர்வையின் பின்னால் மறைந்திருந்த இனவாதம் என்ற மிருகம் தற்போது வெளிக் 02

# செம்மணி மனிதப் புதைகுழிக்கு சர்வதேச நீதி விசாரணை தேவை

## சோமரத்ன ராஜபக்ஷவும் அந்த விசாரணையில் இணைத்துக்கொள்ளப்பட வேண்டும் எனவும் நாடாளுமன்றில் தமிழரசு எம்.பி. ரவிகரன் வலியுறுத்து

(பா.சதீசன்)

யாழ்ப்பாணம், செம்மணி – சித்துப்பாத்தி மனிதப் புதைகுழி விவகாரத்துக்குச் சர்வதேச நீதி விசாரணை தேவை என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் சபையில் நேற்று உரையாற்றும்போது வலியுறுத்தினார்.

அதேவேளை, கிருஷாந்தி குமாரசுவாமி படுகொலையுடன் தொடர்புடைய குற்றவாளியான சோமரத்ன ராஜபக்ஷ எனும் முன்னாள் இராணுவ லான்ஸ் கோப்ரல், இராணுவத்தின் படுகொலைச் செயற்பாடுகள் தொடர்பில் ஏற்கனவே நீதிமன்றத்துக்குச் சாட்சியமளித்த பி 2899 என்னும் வழக்கைத் 02






இலங்கைத் தமிழரசுக் கட்சி தொடர்பாக திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டுள்ள வழக்கு மீண்டும் வரும் செப்டம்பர் முதலாம் திகதி மன்றில் எடுத்துக் கொள்ளப்பட இருக்கிறது.

கட்சியின் தலைவராக இருந்த மாவை சேனாதிராஜா அப்பதவியில் இருந்து விலகிய நிலையில், தலைமைப் பொறுப்பை ஏற்றுள்ள சி.வி.கே.சிவஞானத்தை, மாவையின் இடத்துக்கு வழக்கின் எதிராளியாகச் சேர்த்துக் கொள்வது தொடர்பான விடயத்துக்காகவே நீதிமன்றில் அன்றைய தினம் இந்த வழக்கு எடுக்கப்படுகின்றது.

அப்படி அந்த வழக்கில் தம்மை எதிராளியாகச் சேர்த்துக் கொள்கின்றமையை 02

# நெல்லியடியில் விபத்து; குடும்பஸ்தர் படுகாயம்!

நெல்லியடி, மாலைசந்தியில் மோட்டார் சைக்கிளும் ஹன்டர் வாகனமும் மோதி இடம்பெற்ற விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயம் அடைந்துள்ளார்.

நேற்று வியாழக்கிழமை காலை இடம்பெற்ற இந்த விபத்தில் மாலைசந்தி, வதிரியைச் சேர்ந்த சந்திரன் ஜெயசீலன் (வயது 51) என்பவரே படுகாயம் அடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்து தொடர்பாக நெல்லியடி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சி.வி.கே.சிவஞானம் ஆட்சேபிக்காமல் இணங்கும் நிலைப்பாட்டை நீதிமன்றுக்கு ஆவணம் மூலம் தெரியப்படுத்தியிருக்கின்றமையால், அவரை நீதிமன்றம் அந்த அந்த வழக்கில் மாவை சேனாதிராஜாவின் இடத்துக்கு பதிலீடு செய்யப்படுகின்ற எதிராளியாக செப்டம்பர் முதலாம் திகதி தவணையின் போது பிரகடனப்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அத்தோடு இந்த வழக்கு தொடர்பான தமது பதில் மனுவை புதிய எதிராளி தாக்கல் செய்வதற்கும் நீதிமன்றம் அன்றைய தினம் கால அவகாசம் வழங்கி உத்தரவிடக் கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அப்படி புதிய எதிராளியாகச் சேர்க்கப்படும் தற்போதைய தலைவர் சி.வி.கே.சிவஞானம் வழக்குத் தொடர்பில் தமது பதில் மனுவை தாக்கல் செய்ய வாய்ப்பு அளிப்பது, வழக்கை முடித்து வைப்பதற்கான ஒரு பாதையைத் திறக்கக் கூடும் எனவும் கருதப்படுகின்றது.

இந்த வழக்கைப் பொறுத்தவரை இன்றைய நிலையில், வழக்கைத் தொடுத்த வழக்காளி கூறுகின்ற நிவாரணங்களில் பிரதானமானவற்றை மூன்று எதிராளிகளைத் தவிர ஏனையோர் அனைவரும் ஏற்றுக்கொள்ளுகின்ற நிலைப்பாடே காணப்படுகின்றது.

கட்சி நடத்திய தேசிய மாநாட்டின் பொதுச்சபையில் வாக்களித்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 156 க்கு மேற்படாமல் இருந்திருக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டை வழக்காளி தமது வழக்கில் பிரதானமாக வலியுறுத்தி நிற்கின்றார்.

இன்றைய நிலையில் அதை ஏற்றுக்கொண்டு இணங்குவதற்கு எதிராளிகளான சிறிதரன், யோகேஸ்வரன், குகதாசன் ஆகிய மூவரையும் தவிர, ஏனைய எதிராளிகள் அனைவரும் தயார் நிலையே காணப்படுகின்றது.

ஆரம்பம் தொடக்கம் தேசிய மாநாட்டை ஒட்டிய பொதுக்குழுவில் வாக்களிக்கும் உரிமை 156க்கு உட்பட்ட உறுப்பினர்களுக்கே உண்டு என்ற நிலைப்பாட்டை கட்சிக்குள் பல கூட்டங்களிலும் தொடர்ந்து வலியுறுத்தி வந்தவர் சி.வி.கே.சிவஞானம்.

அந்த விவகாரத்தை ஒட்டியே வழக்கு தொடுக்கப்பட்டு இப்போது இழுபறியில் நிற்கின்றது.

156 பேருக்கு உட்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட பொதுச் சபை மூலமே வருடாந்த மாநாட்டுக்கான உத்தியோகத்தர் தெரிவுகளும் தீர்மானங்களும் எடுக்கப்பட வேண்டும் என்பதை மீண்டும் தமது பதில் மனு மூலம் வலியுறுத்தக் கூடிய கட்சியின் புதிய தலைவர் சி.வி.கே.சிவஞானம், அந்த அடிப்படையில் மேலும் காலதாமதப் படுத்தாமல் கட்சியின் மாநாட்டை நடத்துவதற்கு உத்தரவிடுமாறு தமது பதில் மனு மூலம் நீதிமன்றத்தை வலியுறுத்திக் கோரக்கூடிய ஒரு வாய்ப்பு இப்போது அவருக்குக் கிட்டியுள்ளது. அது மாத்திரமல்ல, மாநாட்டை நடத்தாமல் வழக்கை இழுபட விட்டால் கட்சிக்கு ஏற்படக் கூடிய பாதிப்புகளை நீதிமன்றத்திற்குச் சுட்டிக்காட்டி, விரைந்து ஒரு முடிவை வழங்குமாறு நீதிமன்றத்தை அவர் தமது பதில் மனு மூலம் வலியுறுத்திக் கோரக்கூடிய வாய்ப்பும் இப்போது கிட்டியுள்ளது.

சிறிதரன், யோகேஸ்வரன், குகதாசன் ஆகியோர் அதற்கு இணங்காமல் நின்றால், நீதிமன்றம் குறுகிய காலத்தில் அதை விசாரித்து ஒரு வழிகாட்டல் உத்தரவை வழங்குமாறு தலைவர் என்ற முறையில் சிவஞானம் நீதிமன்றத்தை வலியுறுத்திக் கோரக்கூடிய சூழலும் ஏற்பட்டுள்ளது.

156 பேருக்கு உட்பட்ட உறுப்பினர்களுடன்தான் கட்சியின் பொதுக்குழு கூடி தீர்மானம் எடுப்பது சட்ட ரீதியானது என்பதை ஏதோ ஒரு கட்டத்தில் எல்லா எதிராளிகளும் நீதிமன்றத்தில் ஏற்றுக்கொண்ட நிலைமையும் உள்ளது என்பது நீதிமன்றத்திற்கு இப்போது சுட்டிக் காட்டப்படக் கூடும்.

தற்போதைய தலைவர் என்ற முறையில் சி.வி.கே.சிவஞானம் சமர்ப்பிக்கக் கூடிய பதில் மனுவின் காத்திரத் தன்மைகளைக் கவனத்தில் எடுத்து, நீதிமன்றமும் மேலும் காலம் இழுபட விடாமல், வழக்கை விரைந்து முடிவுறுத்தக்கூடிய ஒரு நிலைப்பாட்டை எடுக்கவும் வாய்ப்புகள் உண்டு.

ஆயினும், அப்படி முடிப்பதற்கும் குறைந்தபட்சம் இன்னும் ஆறு மாதங்களைச் செலவது எடுக்கக்கூடும்.

முதலாம் திகதி நீதிமன்றம் இந்த வழக்கை கையாளும் போக்கை அவதானித்து, அத்தகைய சீக்கிரத்தில் வழக்கு முடியுமா என்பதை அப்போது ஊகிக்க முடியும் என நினைக்கிறேன்.

## ரி - 56 ரகத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

காரில் இருந்த ஒருவர் மீது இனந்தெரியாத நபர்களால் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

துப்பாக்கிச்சூட்டில் சம்பந்தப்பட்ட காரில் இருந்த நபர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். இறந்தவரின் சடலம் அடையாளம் காணப்படவில்லை.

ரி – 56 ரகத் துப்பாக்கியைப் பயன்படுத்தி துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது என்றும், மேற்படி நபர் மீது 20 இற்கும் மேற்பட்ட துப்பாக்கிச்சூடுகள் நடத்தப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

## செம்மணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தற்போதைய செம்மணி மனிதப் புதைகுழி வழக்குடன் தொடர்புபடுத்துவதுடன், சர்வதேச நீதி விசாரணைகளில் சோமரத்ன ராஜபக்ஷ இணைத்துக்கொள்ளப்பட வேண்டும் எனவும் ரவிகரன் எம்.பி. கேட்டுக்கொண்டார்.

அத்தோடு செம்மணியில் மீட்கப்பட்ட எலும்புக்கூடுகளை அடையாளம் காண்பது தொடர்பான விசாரணைகளில் வாக்குமூலம் வழங்கி வரும் மக்களைக் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் அச்சுறுத்துவதை இதன்போது சுட்டிக்காட்டிய ரவிகரன் எம்.பி., குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் இத்தகைய செயற்பாட்டை வன்மையாகக் கண்டித்தார்.

இந்தச் செம்மணி கோரப் படுகொலையின் விசாரணைகள் மும்முரமடையும் போது குற்றமிழைத்த படையினர் நாட்டை விட்டுத் தப்பியோட வாய்ப்பிருப்பதாகச் சுட்டிக்காட்டிய ரவிகரன் எம்.பி., இந்த விடயத்தில் குற்றமிழைத்த தரப்பினர் நாட்டை விட்டு தப்பிக்காமல் இருப்பதை உறுதிப்படுத்துமாறும் வலியுறுத்தினார்.

மேலும், முல்லைத்தீவு – கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி விவகாரத்துக்கும் சர்வதேச நீதி விசாரணை தேவை என்று ரவிகரன் எம்.பி. இதன்போது கேட்டுக்கொண்டார்.

## சுமந்திரன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிளம்பியுள்ளது.

இனவாதம் இல்லாவிட்டால் அவர்களுக்கு அரசியல் இருப்பு இல்லை. எனினும், இனவாதத்துக்கு ஒருபோதும் இருப்பு இருக்காது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

சுமந்திரன் தெரிவு செய்த பாதை தவறு. எனவே, அவர் தனது பயணத்தை மாற்றிக்கொண்டு இனவாதமற்ற – நாட்டின் சமத்துவத்துக்காக முன்னிலையானால் நல்லது. அவ்வாறு இல்லையேல் அரசியல் எதிர்காலம் இல்லாமல் போகும்.

கடந்த பொதுத்தேர்தலில் அவர் நாடாளுமன்றம் கூட வரவில்லை. அவருக்கு வடக்கு, கிழக்கில் அரசியல் வாய்ப்பு கிட்டாமல் போகும்." – என்றார்.

இதே போன்ற காட்டமான உரை ஒன்றைச் சுமந்திரனின் பெயரை நேரடியாகக் குறிப்பிடாமல் – ஆனால் அவரைச் சுட்டும் விதத்தில் – அவரை இனவாதி என மோசமாக விமர்சிக்கும் விதத்தில் – அரசு தரப்பில் சபை முதல்வரும் அமைச்சருமான பிமல் ரத்நாயக்கா நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் ஆற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



# மட்டக்களப்பு மாநகர சபை அமர்வில் ஹர்த்தால் தொடர்பில் அமளிதுமளி

## தமிழரசுக் கட்சி - தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் கடும் வாக்குவாதம்

(கனகராசா சரவணன்)

வடக்கு – கிழக்கில் அளவுக்கு அதிகமான இராணுவப் பிரசன்னத்துக்கு எதிராக நடந்து முடிந்த ஹர்த்தாலின் போது மட்டக்களப்பு மாநகர சபையின் மேயரைத் தேசிய மக்கள் சக்தியின் மாநகர சபை உறுப்பினர்கள் சிலர் திட்டமிட்டு அவமானப்படுத்தியுள்ளனர் என்று மாநகர சபை அமர்வில் தெரிவிக்கப்பட்டதையடுத்து இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்களுக்கும் தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்களுக்கு இடையே கடும் வாக்குவாதம் இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாநகர சபையின் மாதாந்த அமர்வு நேற்று வியாழக்கிழமை மாநகர சபை மேயர் சிவம் பாக்கியநாதன் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது கடந்த 18 ஆம் திகதி வடக்கு – கிழக்கில் இடம்பெற்ற ஹர்த்தாலின் போது மட்டக்களப்பு மாநகர சபை மேயர் கடைகளைப் பூட்டுமாறு கோரினார் என்று ஊடகங்களில் வெளிவந்த செய்தி உண்மையா அல்லது திரிவுபடுத்தப்பட்டதா எனக் கூறுமாறு மேயரிடம் உறுப்பினர் துரைசிங்கம் மதன் கோரிக்கை விடுத்தார்.

இதனைத் தொடர்ந்து மேயர், “அன்றைய தினம் நான் வீட்டில் இருந்து மாநகர சபைக்குச் செல்லும் போது



நகரில் சில கடைகள் திறக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டதையடுத்து அந்தப் பகுதிக்குச் சென்றேன். அப்போது அந்தப் பகுதியில் தேசிய மக்கள் சக்தியின் மாநகர சபை உறுப்பினர்கள் சிலர் மற்றும் கட்சி ஆதரவாளர்கள் நிற்பதைக் கண்டு வாகனத்தை விட்டு இறங்கி தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர் ஒருவரிடம் ஹர்த்தால் செய்வதன் நோக்கத்தைத் தெரிவித்தேன்.

அப்போது அங்கு இருந்த தேசிய மக்கள் சக்தியின் மாநகர சபை உறுப்பினர்கள் சிலர் மற்றும் கட்சி ஆதரவாளர்கள் என்னைச் சட்டவிரோதமாக வாகனத்தைப் பயன்படுத்தியதாகப் பேசினர். நான் அப்போது ஒன்றும் பேசவில்லை. அவர்களே வர்த்தகர்கள் எனக்குப் பேசியது போல் வீடியோ எடுத்து ஊடகங்களுக்கு அனுப்பியதுடன் எனக்கு எதிராகப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடும் செய்திருந்தனர். அங்கு சென்று விசாரணையின் பின்னர் சமாதானமாக இரு தரப்பும் செல்வதாகத் தெரிவித்து அது முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது.

இந்தநிலையில் நான் கடைய மூடுமாறும் அல்லது அனுமதிப் பத்திரம் இரத்துச் செய்யப்படும் என்றும் வர்த்தகர்களிடம் தெரிவித்ததாகச் சொல்லாத ஒன்றைச் சொன்னதாகக் கூறி எனக்கு அவமானம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.” – என்றார்.

இதன்போது மேயரைத் திட்டமிட்டு தேசிய மக்கள் சக்தியினர் அவமானப் படுத்துவதாகத் துணை மேயர் வைரமுத்து தினேஷ்குமார் மற்றும் உறுப்பினர் கருணாநிதி ஜனகன் ஆகியோர் தெரிவித்தனர்.

இதையடுத்து தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்களுக்கும் தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்களுக்கும் இடையில் கடும் வாக்குவாதம் இடம்பெற்றது. சுமந்திரனின் ஹர்த்தாலுக்கு வர்த்தகர்கள் ஆதரவு வழங்க முடியாது என்று தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பில் சபையில் அரை மணித்தியாலயமாக வாக்குவாதம் நீடித்தது. இதையடுத்து மேயர் சபை அமர்வை முடிவுக்குக் கொண்டு வந்தார்.





# உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் பெயரப் பட்டியலைச் சமர்ப்பிக்கவும்

## தேர்தல் ஆணைக்குழு அறிவிப்பு

உள்ளூராட்சி மன்றங்களுக்கு பெயர் குறித்து அனுப்பப்பட வேண்டிய உறுப்பினர்களின் பெயர்ப்பட்டியலை சமர்ப்பிக்காத அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும் அவற்றை விரைவாக சமர்ப்பிக்குமாறு தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

2025ஆம் ஆண்டு மே மாதம் 06 ஆம் திகதியன்று நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் உறுப்பினர் பதவி உரித்தாகியுள்ள அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும் ஒவ்வோர் உள்ளூராட்சி மன்றங்கள் சார்பாக பெயர்குறித்து அனுப்பப்பட வேண்டிய உறுப்பினர்களின் பெயர்ப்பட்டியல் தேர்தல் ஆணைக் குழுவினால் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட வேண்டியுள்ளது.




எனினும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும் சில மாவட்டங்களில் பெயர் குறிக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் பெயர்ப்பட்டியலை இதுவரை பூர்த்தி செய்து அனுப்பவில்லை என்பது அவதானிக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதனடிப்படையில், உறுப்பினர் பதவி உரித்தாகியுள்ள யாதேனும் அங்கீகரிக்கப்பட்ட ஓர் அரசியல் கட்சி, சுயேச்சைக் குழு உள்ளூராட்சி மன்றங்களுக்காக பெயர்குறித்து அனுப்பப்பட வேண்டிய உறுப்பினர்களின் பெயர்களை தேர்தல் ஆணைக்குழுவுக்கு இதுவரை அனுப்பியிருக்கவில்லை எனில், அந்த அரசியல் கட்சியின் செயலாளர்களும் சுயேச்சைக் குழுக்களின் தலைவர்களும் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய உரிய பெயர்குறித்த நியமனங்களை துரிதமாக சம்பந்தப்பட்ட தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு வழங்குமாறு அறிவித்துள்ளது.

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச்சட்டத்திற்கு அமைய தேர்தலைத் தொடர்ந்து உறுப்பினர் பதவி உரித்தாகி இருப்பின், துரிதமாக உறுப்பினர்களைப் பெயர்குறித்து அனுப்புவது போட்டியிட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின், சுயேச்சைக் குழுக்களின் பொறுப்பு என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# விசேட தேவையுடையவர்களுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை

விசேட தேவையுடைய சமூகத்துக்கு நிவாரணம் வழங்குவதற்கான முறையான வழிமுறையைத் தயாரிப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் செயலாளர் நந்திக சனத் குமாநாயக்க மற்றும் விசேட தேவையுடையவர்களுக்கான தேசிய செயலக அதிகாரிகளுக்கு இடையே நேற்று பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் கலந்துரையாடல் நடைபெற்றது.

இதன்போது விசேட தேவையுடையவர்களுக்காக ஜனாதிபதி நிதியத்தால் வழங்கப்படும் சேவைகளை மேலும் விரிவுபடுத்துதல் மற்றும் முறையாக வழங்குதல் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

மருத்துவ உதவிகளை அதிகரிப்பது, விசேட தேவையுடையவர்களை வலுவூட்டுவதற்குத் தேவையான உபகரணங்களை வழங்குதல், அந்தக் குடும்பங்களில் உள்ள பிள்ளைகளின் கல்வியைத் தொடர்ச்சியாக முன்னெடுக்க உதவி வழங்குதல், விசேட தேவையுடைய பிள்ளைகளுக்குக் கல்விக்கான உதவிகளை வழங்குதல் போன்றவற்றை ஜனாதிபதி நிதியத்தின் ஊடாக முன்னெடுக்கவும் தற்பொழுது வழங்கப்படும் சேவைகளை மேலும் செயல்திறனுடன் மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதியின் செயலாளர் நந்திக சனத் குமாநாயக்க தெரிவித்தார்.



நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# சுமந்திரன் இனவாதி?

'ஆடு நனைகின்றது என ஓநாய் கவலைப்பட்டதாம்.

அந்த மாதிரி இருக்கின்றது இலங்கை தமிழரசுக் கட்சிப் பொதுச் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் குறித்து ஆளுந்தரப்பு அமைச்சர்கள் கவலைப்படுகின்ற விவகாரம்.

இனவாத அரசியல் பாதையை சுமந்திரன் மாற்றாவிட்டால் வடக்குக் கிழக்கில் அவரது அரசியல் எதிர்காலம் இல்லாமல் போகக் கூடும் என்று ஆளும் தேசிய மக்கள் சக்தியின் பிரதி அமைச்சர் மஹிந்த ஜயசிங்க கவலை தெரிவித்திருக்கிறார்.

''சுமந்திரன் அடிப்படைவாதி அல்லர், அவர் நடுநிலைவாதி என்று நாம் இதுவரை காலமும் நினைத்துக் கொண்டிருந்தோம். ஆனால் நடுநிலை என்ற போர்வையின் பின்னால் மறைத்திருந்த இனவாதம் என்ற மிருகம் தற்போது வெளிக்கிளம்பி உள்ளது'' என்று அவர் கூறியிருக்கிறார்.

ஆளும் தரப்பில் சபை முதல்வரும், அரசு தரப்பில் நாடாளுமன்றத்தில் குதியம் குத்தி வருபவருமான அமைச்சர் பிமல் ரத்நாயக்காவும் இதே போன்ற கருத்தை - நேரடியாக சுமந்திரனின் பெயரைக் குறிப்பிடாமல் - சூசகமாக அவரைச் சுட்டி, நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரைத்திருக்கின்றார்.

இந்த நாட்டின் அப்பாவி சிறுபான்மையினரான தமிழர்களை அடக்கி, ஒடுக்கி, இன்வழிப்புச் செய்து வருகின்ற பௌத்த - சிங்கள மேலாண்மைத் திமிர்ப் போக்குடைய பேரினவாதிகள், காலத்துக்குக் காலம் தமிழ் மக்களுக்காக குரல் எழுப்பிப் போராடுகின்ற அவர்களது தலைவர்களை இனவாதிகளாக சித்திரித்து, தங்களை இன சமரசம் பேணும் சாதனையாளர்களாக காட்டிக் கொள்ளும் அவலம் புதியதல்ல.

பாதிக்கப்பட்ட - அடக்கப்பட்ட - ஒடுக்கப்பட்ட - தமது இனத்துக்காக குரல் எழுப்பும் சிறுபான்மை இனங்களின் தலைவர்களை இனவாதிகளாக சித்திரிப்பது பேரினவாதத்தை ஏவி விடுகின்ற அதன் தலைமைகளின் பரவணிப் பண்பியல்புதான்.

தந்தை செல்வாவின் காலத்தில் இருந்தே இத்தகைய குற்றச்சாட்டுப் போக்கு பேரினவாதிகள் மத்தியில் இருந்து அவ்வப்போது வெளியிடப் படாமல் இருந்ததில்லை.

அந்த வகையில் ஈழத் தமிழினத் திற்காக முன் நின்று, இலங்கை அரசியல் களத்தில் காத்திரமாகவும் துணிச்சலாகவும் குரல் எழுப்பி, நடவடிக்கை எடுத்து வரும் சுமந்திரன் மீது சிங்களத்துக்கு - குறிப்பாக தேசிய மக்கள் சக்திக்கு - இப்போது அதிக சீற்றம் ஏற்பட்டு வருவதற்குக் காரணமுண்டு.

சரியோ, பிழையோ ஈழத்தமிழர்களை ஏமாற்றி, ஜனாதிபதித் தேர்தலிலும் நாடாளுமன்றத் தேர்தலிலும் கணிசமான வெற்றிகளை தமிழர் பிரதேசத்தில் ஈட்டியது தேசிய மக்கள் சக்தி. அதன் மூலம் தமிழர்களின் ஆதரவு பெற்ற முதல் சிங்கள அமைப்பு எனத் தங்களை அடையாளப்படுத்திக் கொண்டு, உரிமை கோரலாம் எனப் புறப்பட்ட தேசிய மக்கள் சக்திக்கு தனி மனிதராக நின்று உள்ளூராட்சி தேர்தலில் சம்மட்டி அடி கொடுத்தவர் சுமந்திரன்தான்.

தமிழர்களின் பிரதிநிதிகளாக தாங்கள் உருவெடுப்பதற்குக் கிட்டிய அருமையான வாய்ப்பை உள்ளூராட்சி தேர்தல் முடிவுகள் மூலம் சுமந்திரனே தவிடு பொடியாக்கினார் என்று கருதும் தேசிய மக்கள் சக்தி இப்போது அதன் காரணமாக சுமந்திரனுக்கு எதிராக இனவாதப் பட்டத்தைக் கிளப்புகின்றது.

தமிழர்கள் மத்தியில் துணிச்சலாக உரிமைக் குரலை எழுப்பும் சுமந்திரனுக்கு தென்னிலங்கை மக்கள் மத்தியிலும் கணிசமான மரியாதையும் பெயரும் ஆதரவும் இருப்பதும் இப்போது தென்னிலங்கை ஆட்சியாளர்கள் அவருக்கு எதிராக சீற்றம் கொள்வதற்கு மற்றொரு காரணமாகும்.

தன்னுடைய மக்களுக்காக - அவர்களுடைய நலனுக்காக - அவர்களுடைய எதிர்காலத்திற்காக - குரல் எழுப்புவதும் நீதிமன்றத்திலும் வெளியிலும் சளையாமல் போராடுவதும் இனவாதம் என்றால், அந்தப் பெயரை சுமந்திரன் சுமந்தாகத்தான் வேண்டும். அப்படி சுமப்பதில் அவர் பெருமைப்படலாம்.




# முரசு, A One Media, NORTH WALL நல்லூரில் வழங்கிய தாக சாந்தி

யாழ். நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் மஹோற்சவத்தை முன்னிட்டு முரசு, A One Media, NORTH WALL குழுமத்தால் தாக சாந்தி நிலையம் அமைக்கப்பட்டு குளிர்பானம் வழங்கப்பட்டது.

நல்லூர் பின்வீதியில் அமைந்துள்ள 'முரசு' அலுவலகத்தின் முன்றலில் தாக சாந்தி நிலையம் அமைக்கப்பட்டு ஆலயத்துக்குச் செல்லும் பக்தர்களின் தாகத்தைத் தீர்க்கும் வகையில் குளிர்பானம் வழங்கப்பட்டது.
























# கடைக்குச் சென்ற வர்த்தகர் மயங்கி விழுந்து உயிரிழப்பு

கடைக்கு பொருள்களை கொள் வனவு செய்வதற்காக யாழ். நகருக்கு சென்ற வர்த்தகர் ஒருவர் மயங்கி விழுந்து உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் முத்தமிழ் வீதி, கொட்டடி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சின்னையா பிறேமானந் (வயது 58) என்ற வர்த்தகராவார்.

நேற்று பிற்பகல் 1.15 மணியளவில் யாழ். நகருக்கு சென்ற நிலையில், வர்த்தக நிலையம் ஒன்றின் முன்பாக மயங்கி விழுந்த நிலையில் யாழ். போதனா வைத்திய சாலைக்கு கொண்டு சென்றபோதும் அவர் உயிரிழந்துவிட்டார் என தெரிவிக்கப்பட்டது.

இந்த மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணைகளை மேற் கொண்டார். சாட்சிகளை யாழ்ப்பாண பொலிஸார் நெறிப்படுத்தினர்.

# விபத்தில் காயம் அடைந்தவர் சிகிச்சை பலனின்றி உயிரிழப்பு

யாழ். கரவெட்டி பிரதேச செயலகத் திற்கு முன்பாக இடம்பெற்ற விபத்தில் படுகாயம் அடைந்த குடும்பத்தார் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் பொன் னம்பலம் பாடசாலை வீதி, நெல்லி யடியைச் சேர்ந்த லட்சுமணன் நகுலேஸ் வரன் (வயது 61) என்ற 5 பிள்ளைகளின் தந்தையாவார்.

மேற்படி நபர் கடந்த 5 ஆம் திகதி பிற்பகல் வீட்டிலிருந்து நெல்லியடி நகர் நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோது, பிரதேச செயல கத்திற்கு முன்பாக விபத்தில் சிக்கி மயக்கமடைந்த நிலையில் பருத்தித் துறை ஆதார வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத் தியசாலைக்கு மாற்றப்பட்டு இருந்த நிலையில் நேற்று முன்தினம் செவ் வாய்க்கிழமை பிற்பகல் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இந்த மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணைகளை மேற் கொண்டார். சாட்சிகளை நெல்லியடிப் பொலிஸார் நெறிப்படுத்தினர்.

# குடும்பநல தாதி உத்தியோகத்த மாணவி திடீர் சுகவீனம் காரணமாக உயிரிழப்பு

நுரையீரலில் உயர் இரத்த அழுத்தம் ஏற்பட்டு இதயம் செயலிழந்ததன் காரணமாக குடும்பநல தாதி உத்தியோ கத்த மாணவி ஒருவர் உயிரிழந்துள் ளார்.

8 ஆம் வட்டாரம் இரணைப் பாலை யைச் சேர்ந்த ஜெஸ்றி அன்ரன் யோக ராஜா டிலக்சனா (வயது 28) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மேற்படி யுவதி யாழ். போதனா வைத் தியசாலையில் சிகிச்சைக்காக வந் திருந்த நிலையில் திருநெல்வேலியில் உள்ள சகோதரி வீட்டில் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை தங்கியுள் ளார்.

இந்த நிலையில் நேற்று புதன் கிழமை அதிகாலை மூச்சு விட சிரமப்பட்ட நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதித்தபோது அவர் உயிரிழந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணைகளை மேற் கொண்டார். சாட்சிகளை புதுக்குடியிருப்பு பொலிஸார் நெறிப்படுத்தினர். பிரேத பரிசோதனையில் நுரையீரலில் உயர் இரத்த அழுத்தம் ஏற்பட்டு இதயம் செயலிழந்ததால் மரணம் சம்பவித்ததாக அறிக்கையிடப்பட்டுள்ளது.




# ஜெனிவாவுக்கு மற்றொரு கடிதம்

இலங்கை அரசிற்கான சர்வதேச விசாரணை தொடர்பாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளருக்கும் ஐ.நா. மனித உரிமை ஆணைய நிரந்தர மற்றும் அவதானிப்பு நாடுகளின் அங்கத்துவர்களுக்கும் தமிழ் தரப்பில் இருந்து மற்றொரு கடிதமொன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள், அரசியல் பிரமுகர்கள், மதத் தலைவர்கள், சிவில் சமூக தலைவர்கள் என பலரது கையொப்பத்துடன் இந்தக் கடிதம் அனுப்பபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், அர்ச்சனா இராமநாதன் ஆகியோர் இந்தக் கடிதத்தில் ஒப்பமிட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் யாழ் ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அரசியல் மற்றும் சிவில் சமூக தரப்பினரால் தெளிவுபடுத்தப்பட்டது.

# புதுக்குடியிருப்புப் பிரதேச சபைப் பகுதியில் கட்டாக்காலிகளுக்கு ரூபா 10,000 தண்டம்

## விபத்துகள் அதிகரிப்பதனால் இந்த முடிவு என்கிறார் தவிசாளர்




(பா.சதீசன்)

விபத்துகள் அதிகரிப்பதனால் கட்டாக்காலி கால்நடைகளிற்கு பத்தாயிரம் ரூபா அறவிட தீர்மானித்துள்ளதாக புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் தவிசாளர் வேலாயுதம் கரிகாலன் தெரிவித்தார் .

புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்பாக நேற்றையதினம் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தகவல் வெளியிட்டார்.

புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான், விசுவமடு, தேவிபுரம் ஆகிய பகுதிகளில் இரவு நேரங்களில் கட்டாக்காலி கால்நடைகளின் நடமாட்டம் வீதிகளில் அதிகரித்துள்ளமையால் அது போக்குவரத்துக்கு இடையூறாக உள்ளது. விபத்துக்களும் அதிகளவில் ஏற்பட காரணமாக இருக்கின்றது.

கட்டாக்காலி கால்நடைகளை கட்டுப்படுத்தும் நோக்கில் சபை அமர்வில் தீர்மானங்களை நிறைவேற்றியிருந்தோம். 14பேர் ஆதரவளித்திருந்தார்கள். கட்டாக்காலி கால்நடைகளை கட்டுப்படுத்துவதற்கு கால்நடை உரிமையாளர்களிடம் நிதியினை அறவிட சபை தீர்மானம் எடுத்திருக்கின்றது.

பெரிய மாட்டிற்கு 5000 ரூபாவும், சிறு கன்றுகளுக்கு 3000 ரூபாவும் தண்டப்பணமாக சபையில் இருந்தது. ஆனால் தற்போது 10,000 ரூபாவாக தீர்மானித்து இருக்கின்றோம். அதனை மீண்டும் பண்ணையாளர்களுக்கு அறிவுறுத்தி இருக்கின்றோம்.

சபைக்கு கிடைக்கும் வருமானத்தை வைத்தே தெருவிளக்குகள் பொருத்துதல் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ள இருக்கின்றோம். தற்போது 12 வட்டாரங்களிலும் பழுதடைந்த தெருவிளக்குகளைத் திருத்தங்கள் மேற்கொண்டு வருகின்றோம்.

புதுக்குடியிருப்பு பிரதேசசபை 2023 ஆம் ஆண்டிலிருந்து தேர்தல் நடைபெறாமல் பிற்போடப்பட்ட நிலையிலிருந்தது. இதனால் பிரதேசசபை செயலாளரின் கீழ் இயங்கி வந்தது. கடந்த மே மாதம் 6ஆம் திகதி உள்ளூராட்சி சபை தேர்தல் நிறைவடைந்து ஜூன் மாதம் 3ஆம் திகதி புதுக்குடியிருப்பு பிரதேசசபையின் நிர்வாக பொறுப்புக்களை உத்தியோக பூர்வமாக எடுத்திருந்தோம். அதன் பின்னர் 2025 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவு திட்டம் பிரதேசசபை செயலாளரின் அதிகாரத்தின் கீழ் நிறுவப்பட்டிருந்தது.

அதன்பின்னர் பிரதேசசபை தவிசாளர், உறுப்பினர்கள் சபைத் தீர்மானங்கள், அபிவிருத்தி விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடி வரவு - செலவு திட்டத்திற்கமைய அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ள இருக்கின்றோம். - என்றார்.

# ஆதனப் பெயர் மாற்றம்

யாழ் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் 15, விக்ரோறியா வீதியில் அமைந்துள்ள 5/2 எனும் ஆதனம் எமது ஆதனப்பதிவேட்டில சொந்தக்காரர் என பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனம் யாழ்ப்பாணம் உடுவிலைச் சேர் ந்த நாகலிங்கம் கணேசலிங்கம் பெண் சுகிர் தாலட்சுமி என்பவர் யாழ் நொத்தாரிசு மு.இ.காராளசிங்கம் முகதாவில் 1980.11.20 திகதி 5085ஆம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் எம்.சதாசிவம் தியாகராஜா பெண் லோகேஸ் வரிக்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதத்திற்கு யாழ்ப்பாணம் உரும்பிராய் மேற்கு தியாகராஜா ஜெயக்குமார் என்பவர் யாழ் நொத்தாரிசு S.N.விஸ்வலிங்கம் முகதாவில் 2011.07.29ஆம் திகதி 4230ஆம் இலக் கத்தில் நிறைவேறிய வெளிப்படுத்தல் உறுதி மூலம் தனது மாதாவழி முதுசமும் ஆட்சியும் என வெளிப்படுத்தியுள்ளார்.

குறித்த ஆதனத்தை யாழ்ப்பாணம் உரும்பிராய் மேற்கு தியாகராஜா ஜெயக்குமார் என்பவர் கொழும்பு நொத்தாரிசு நளினி கணேஷயோகன் முகதாவில் 2023.06.16ம் திகதி 5666ஆம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் குணசிங்கம் குணதாசன் என்பவரிற்கு வழங் கியுள்ளார்.

# ஆதன அட்டவணை

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாண மாநகர சபை யாழ்ப் பாணப் பகுதி வண்ணார் பண்ணை தென்கிழக்கு இறை யாழ்ப்பாணம் மாநகரசபை யாழ்ப் பாணம் பிரதேச செயலா ளர் பிரிவு கிராம அலுவலர் பிரிவு J/82 வண்ணார்பண்ணை “தமிழ்பறங்கித்தறை” நெற்பரப்பு நான்கு குளி பதினொன்றரை (நெற்பர 04குளி 11 ½) இதில் வடகிழக்குப்பக்கமாக நெற்பரப்பு ஒன்றரை யும் (நெபர 1 ½) கிணறும் மலசலகூடமும் வான்பயிர் செய்பயிர்களும். இது 1986ஆம் ஆண்டு ஆனி மாதம் 14ம் திகதி உத்தரவு பெற்ற உலாந்தர் எம்.என் நவரத்தினம் அவர் களால் அளந்து வரையப்பட்ட 93ம் இலக்கப் படத்தில் 1ஆம் இலக்கத்தினூடாகச் சுட்டப்பட்டுள்ளது. இந்தப்பரப்பு ஒன்றரைக்கும் (நெபர 1 ½) குறித்த 93ஆம் இலக்கப் படத்தின்படி எல்லைகள்,

**கிழக்கு :** சரவணமுத்து வீரசிங்கத்தின் ஆதனம்

**வடக்கு :** கணபதிப்பிள்ளை நடராஜாவின் ஆதனம்

**மேற்கு :** சின்னையா சதாசிவத்தின் ஆதனமும் பாதையும்

**தெற்கு :** குறித்த பாதை முகப்பும் திருமதி மகேஸ்வரி ஆனந்தரத்தினத்தின் ஆதனமும் திருமதி யோகேஸ்வரி இரஞ்ஞரத்தினத்தின் ஆதனம்

இதடங்கலும் இன்னும் குறித்த பாதையால் (10 அடி அகலம்) போக்குவரவு செய்யும் உரித் தும் ஆனால் குறித்த கிணற்றில் மேற்கெல்லைக் காணிக்குரிய தண்ணீர்ப்பங்கும் வழிவாய்க் காலுரித்தும் புறநீங்கலாக.

தற்போது இவ்வாதனத்தை குணசிங்கம் குணதாசன் என்பவர் தனது பெயரை எமது ஆதனப் பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு முழு மையாகவோ அல்லது பகுதி அளவிலோ உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை யில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாத காலத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்க ளுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது குணசிங்கம் குணதாசன் என்னும் பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிகைக எடுக்கப் படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயா மாற்றம் செய்வதால் எழக்கூடிய எப்பொறுப்பிற்கும் மாநகர சபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**முதல்வர்,**
**மாநகரசபை,**
**யாழ்ப்பாணம்.**









# சம்மாந்துறை வளத்தாப்பிட்டியில் நேற்று அமைதி வழியில் கவனவீர்ப்பு நடவடிக்கை

**(பாறுக் ஷிஹான்)**

நூறு நாள்கள் செயல்முனைவின் 21ஆவது நாளில் அம்பாறை மாவட்டத்தின் சம்மாந்துறை பிரதேசம் வளத்தாப்பிட்டி பிரதான வீதியில் நேற்று மதியம் கவனவீர்ப்புப் போராட்டம் இடம்பெற்றது

நிலையான அரசியல் தீர்வுக்கான 100 நாள்கள் செயல்முனையின் 21ஆவது நாள் நிறைவினை முன்னிட்டு அமைதி வழி போராட்டம் முன்னெடுக்கப் பட்டது.

வடக்கு கிழக்கு மாகாணத்திற்கு மீளப்பெறமுடியாத சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வை வலியுறுத்தி இப்போராட்டம் மேற்கொள்ளப்பட்டதுடன் இதன்போது மக்கள் பதாதைகளை ஏந்தி அமைதியான முறையில் கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இதன் போது நிலையான அரசியல் தீர்வுக்கான 100 நாள்கள் செயல் முனைவின் 21ஆவது நாள் குறித்து வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்பு குழு ஏற்பாட்டில் ஊடக வெளியீடு ஒன்றினையும் வெளியிட்டுள்ளனர்.

இது தவிர தொடர்ச்சியாக வடக்கு கிழக்கு பகுதிகளில் அரசினால் திட்டமிட்டு மேற்கொள்ளப்படுகின்ற நில ஆக்கிரமிப்புக்கள், மத சுதந்திர மீறல்கள், ஏனைய வன்முறைகள் போன்றவை இடம்பெறாமல் இருப்பதாக இருந்தால் வட கிழக்கு மக்கள் எதிர்பார்க்கின்ற சமஷ்டி முறையிலான அரசியல் தீர்வு வேண்டும் என்பதை வலியுறுத்தி இக் கவனஈர்ப்பு முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இந்தப் போராட்டத்தைத் தொடர்ந்து அந்தப் பகுதியில் வன ஜீவராசிகள் திணைக்களம் பயன்படுத்தும் கட்டடத்தை ஒப்படைக்கக் கோரி அதே மக்களால் ஒரு அமைதிப் போராட்டம் நடத்தப்பட்டது. அது பற்றிய செய்தி தனியாகப் பிரசுரமாகியுள்ளது.









# அதிகரித்து வரும் விபத்துகள் தொடர்பில் அசமந்தப் போக்கு ஆரோக்கியமானதல்ல

## நீதி, சமாதான நல்லிணக்கப் பணியகம் விசனிப்பு



"அதிகரித்து வரும் வீதி விபத்துகள் தொடர்பில் அசமந்தப் போக்கு ஆரோக்கியமானதல்ல" என்று தெரிவித்து கிளிநொச்சியிலிருந்து நீதி, சமாதான நல்லிணக்கப் பணியகத்தின் இயக்குநர் வண.பிதா எஸ்.ஜே.ஜீவரட்ணம் (அ.ம.தி.) ஓர் அறிக்கையை வெளியிட்டுள்ளார்.

அதில் குறிப்பிடப்பட்டவி வருமாறு:-

வடக்கு, கிழக்கு தமிழர் தாயகப் பிரதேசங்களின் அவலநிலை தீர்ந்தபாடில்லை. தொடர்கதையாக சொத்திழப்புக்களும், உயிரிழப்புக்களும், உரிமையிழப்புக்களும் நடந்துகொண்டேயிருக்கின்றன. கொஞ்சம் கொஞ்சமாய் மெல்ல அழியும் இனமாய் மாறிக்கொண்டிருக்கின்றோம். இன வன்முறையால் கொன்றொழிக்கப்பட்டோம். எஞ்சியதில் கொரோனாவிலும் சுனாமியிலும் பறிகொடுத்தோம். மீதியை இன்று வீதி விபத்துகளில் இழந்துகொண்டிருக்கிறோம். யாரும் கண்டபாடில்லை. அதிகரித்துவரும் வீதி விபத்துகளும் அச்சமூட்டும் கொலைகளும் மலிந்து கிடக்கும் இவ்வேளையில் வடமாகாணத்தில் பணியாற்றும் நீதி சமாதான நல்லிணக்கபணியகம் வேண்டுகோள் ஒன்றினை முன்வைக்க விரும்புகிறது.

மிகவும் சன நெருக்கடியான, முக்கியமான சந்திகளில் சமிக்ஞை விளக்குகளைப் பொருத்த பொறுப்பு வாய்ந்த – சம்பந்தப்பட்ட – அதிகாரிகள், அரசியல் தலைமைகள் உடனடியாக ஆவன செய்ய வேண்டும் என்பதோடு பாரவூர்தி உரிமையாளர் சங்கங்கள், தனியார் மற்றும் அரச போக்குவரத்துத் தொழிற்சங்கங்கள், அரச அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆகியன தங்கள் அமைப்புக்களில் பணியாற்றக்கூடிய சாரதிகளுக்கான தொடர் உளநல ஆலோசனை வழிகாட்டல்களை முதன்மைப்படுத்தி அவர்களின் உளநல மேம்பாட்டை உறுதிப்படுத்திப் பணியாற்றக்கூடிய சூழ்நிலைகளை ஏற்படுத்திக் கொடுக்க உடனடியாக முன்வர வேண்டும். அது தொடர்பான சில திட்டமிடப்பட்ட ஆக்கபூர்வமாக செயற்பாடுகளையும் நடைமுறைப்படுத்த இப்படியான அமைப்புக்கள் முன்வருவது காலத்தின் கட்டாயமானதாகும்.



இதையும் தாண்டி சமூகப் பொது அமைப்புக்கள் மற்றும் போக்குவரத்து பொலிஸ் திணைக்களம் உட்பட காத்திரமான செயற்பாடுகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.

இவற்றையெல்லாம் ஒருங்கிணைத்துச் செயற்படுத்த – வலுவூட்ட – அரச உயர் அதிகாரிகள் முயற்சி எடுக்க வேண்டும் என்பதை வேண்டுகோளாக முன்வைக்கின்றோம்.

அத்தோடு இந்த அமைப்புகள் மற்றும் நிறுவனங்களில் தொழில் புரியும் சாரதிகளுக்கான உளவள ஆலோசனைகள் தொடர்பான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க நீதி, சமாதான நல்லிணக்க பணியகம் தயாராக இருக்கிறது.

அத்தோடு வடக்கு – கிழக்குப் பிரதேசங்களில் புதிதாக பதவிப் பொறுப்புக்களை ஏற்றிருக்கக்கூடிய பிரதேச சபை நிர்வாகம் தங்கள் ஆளுகைக்குட்பட்ட வீதிகளில் உலாவித. திரியும் கால்நடைகளைக் கட்டுப்படுத்த காத்திரமான முயற்சிகளை தொடர்ச்சியாக மேற்கொள்வது அவர்களது கடமை என்பதை உணர்ந்து உடனடியாக செயல்படுத்த முன்வர வேண்டும் என்ற வேண்டுகோளையும் விநயமாக முன்வைக்கிறது. – என்றுள்ளது.

# அதிகளவு சீனியை உட்கொள்ளும் நாடுகளில் பட்டியலில் இலங்கை

மேல் மாகாணத்தில் ஐந்து பேரில் ஒருவர் நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளார் என வைத்திய நிபுணர் மணில்க சுமனதிலக தெரிவித்துள்ளார்.

அதிகபடியான சீனி நுகர்வு காரணமாகவே, இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கை மருத்துவ சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துரைக்கும் போது, வைத்திய நிபுணர் மணில்க சுமனதிலக இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

அத்துடன், இருதய நோய் மற்றும் இரத்த அழுத்தம் அதிகரித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, தொற்றா நோய்கள் வேகமாக அதிகரித்து வருவதுடன், இதன் காரணமாக மாத்திரம் 80 சதவீதமான உயிரிழப்புகள் பதிவு செய்யப்படுகின்றன என வைத்திய நிபுணர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், அதிகபடியான சீனியை உட்கொள்ளும் நாடுகளில் இலங்கையும் உள்ளடங்குவதாகவும், தனி நபரொருவர் வருடமொன்றில் 25 முதல் 30 கிலோ கிராம் வரை சீனியை உட்கொள்கின்றார் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனிடையே, சிறுவர்களிடையே சீனி நுகர்வு அதிகரித்துள்ளதாக



இலங்கை மருத்துவ சங்கத்தின் மருத்துவ நிபுணர் சுரந்த பெரேரா தெரிவித்துள்ளார்.

அதன்படி, சிறுவர்கள் நாளொன்றுக்கு 20 தேக்கரண்டி சீனியை உட்கொள்கின்றனர் எனவும் இந்த நிலைமையை கட்டுப்படுத்த வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.






# வன ஜீவராசிகள் திணைக்களத்திற்கு வழங்கிய கட்டடத்தை மீளளிக்கும்படி கோரி போராட்டம்

## வளத்தாப்பிட்டி கிராம மக்கள் நேற்று அமைதியாக முன்னெடுப்பு

**(பாறுக் ஷிஹான்)**

வன ஜீவராசிகள் திணைக்களத்தின் செயற்பாட்டிற்கு எதிராக சம்மாந்துறை பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட வளத்தாப்பிட்டி கிராம மக்கள் நேற்று அமைதிவழிப் போராட்டம் ஒன்றை மேற்கொண்டனர்.

வளத்தாப்பிட்டிகிராமத்தில் நீண்டகாலமாக வன ஜீவராசிகள் திணைக்களம் பாவித்து வந்த பல்தேவைக் கட்டடத்தை மீண்டும் மக்கள் பாவனைக்கு

கடந்த காலங்களில் இந்த பல்தேவைக் கட்டடம் மக்கள் தேவைக்காக பயன்படுத்தப்பட்டு வந்தது.

கடந்த காலத்தில் இப்பிரதேசத்தில் ஏற்பட்ட யானை – மனித மோதல் காரணமாக ஒருவர் உயிரிழந்த நிலையில் தற்காலிகமாக கிராம அபிவிருத்தி சங்கத்திடம் விடுத்த வேண்டுகோளிற்கமைய வன ஜீவராசிகள் திணைக்களம் தங்களது பயன்பாட்டிற்கு இக்கட்டடத்தைப் பெற்றிருந்தது.



ஜீவராசிகள் திணைக்கள பயன்பாட்டிற்கு அதனை வழங்கி இருந்தது.

எனினும் இன்று வரை பிரதேச செயலகம், மாவட்ட செயலகம், கிழக்கு மாகாண ஆளுநர் போன்ற தரப்புகளுக்குப் பல கடிதங்களை வழங்கிய போதிலும் இந்தக் கட்டடத்தை மீளவும் மக்கள் பாவனைக்கு பெற்றுத்தர நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

எனவே அக்கட்டடம் உடனடியாக மீண்டும் மக்கள் பாவனைக்குக் கையளிக்கப்பட வேண்டும் எனக் கோரி கிராம மக்கள் அமைதிவழி போராட்டம் ஒன்றை மேற்கொண்டு தங்களது கோரிக்கையை உரிய தரப்பினருக்கு அறிவித்துள்ளார்கள்.


சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியும் போராட்டத்தில் ஈடுபட்ட மக்களிடம் சென்று கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டிருந்தார் எனப் போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் ஊடகங்களிடம் குறிப்பிட்டனர்.







# வவுனியா நகரில் விரைவில் வீதி சமிக்ஞை விளக்குகள்



சத்தியலிங்கம் எம்பியின் முன்மொழிவு சாதகமாக ஆராய்வு

வவுனியா நகரின் போக்குவரத்து நெரிசலை கருத்தில்கொண்டு வீதிப் போக்குவரத்தில் ஏற்படுகின்ற சிரமங்களைத் தவிர்க்கும் நோக்கில் வீதி சமிக்ஞை விளக்குகள் பொருத்தும் பணி விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் ப.சத்தியலிங்கத்தின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:-

வவுனியா நகரம் வடக்கையும் தெற்கையும் இணைக்கும் பிரதான வாயிலாகும். வவுனியா நகரினூடாக பெரும் எண்ணிக்கையான வாகனங்கள் தினமும் போக்குவரத்தில் ஈடுபடுகின்றன. இதனால் அன்றாடம் மக்கள் போக்குவரத்து நெரிசல்களை எதிர்நோக்கி வருகின்றனர். குறிப்பாக அலுவலக நேரங்களிலும் பாடசாலை நேரங்களிலும் மிகுந்த சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். இதனைக் கருத்தில்கொண்டு கடந்த மார்ச் மாதம் நாடாளுமன்ற உறுப்பினரால் துறைசார்ந்த அமைச்சருக்கு திட்ட முன்மொழிவொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதில் வவுனியா நகரின் சனநெரிசல் மிக்க பகுதிகளான மணிக்கூட்டுகோபுரச் சந்தி, வைத்தியசாலை சுற்றுவட்ட சந்தி, பசார்வீதி - பள்ளிவாசல் சந்தி, பண்டார வன்னியன் சதுக்கம், குருமண்காடு சந்தி மற்றும் தமிழ் மத்திய மகாவித்தியாலயத்திற்கு முன்பாக என மொத்தமாக ஆறு இடங்களில் மேற்படி வீதிப் போக்குவரத்து சமிக்ஞை விளக்குகளைப் பொருத்துவதற்காக முன்மொழியப்பட்டிருந்தது.

திட்ட முன்மொழிவை சாதாகமாக ஆராய்ந்த அமைச்சர் அதற்கு அனுமதி வழங்கியுள்ளார். கடந்த 19 ஆம் திகதி நாடாளுமன்றக் கட்டடத்தொகுதியில் நடைபெற்ற அமைச்சுசார் ஆலோசனை குழுக்கூட்டத்தில் திட்ட முன்னேற்றம் தொடர்பாக ஆராயப்பட்டது. அதில் தொழிநுட்பக்காரணங்களுக்காக இரண்டு இடங்களில் பொருத்துவது பரிசீலனையிலுள்ளது. ஏனைய நான்கு இடங்களில் சமிக்ஞை விளக்குகள் பொருத்துவதற்கான ஆரம்பக்கட்ட அளவீட்டுப் பணிகள் சம்மந்தப்பட்ட திணைக்களத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இன்று வெப்பநிலை எச்சரிக்கை மட்டத்தில்



நாட்டின் பல பகுதிகளில் வெப்பநிலை இன்று கவனம் செலுத்த வேண்டிய அளவுக்கு உயரும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி, வட, வடமத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களில் சில பகுதிகளிலும் மொனராகலை மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் மனித உடலால் உணரப்படும் அளவில் வெப்பநிலை காணப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படி மாகாணங்களில் உள்ள மக்கள் உடலுக்கு தேவையான அளவு தண்ணீர் பருகுவதுடன், வயதானவர்கள் மற்றும் நோயாளர்கள் மீது அதிக கவனம் செலுத்துமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

# யாழ்.பல்கலைக்கழகத்தில் ஆவணப்பட விழா இன்று!

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் துறை மாணவர்களால் தயாரிக்கப்பட்ட ஆவணப்படங்கள் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் திரையிடப்படவுள்ளன.

யுத்தத்தின்போது தங்கள் அன்புக்குரிய உறவுகளை இழந்தோரின் நினைவுகளை ஞாபகப்படுத்தும் 'தடயம்', அக்குபஞ்சர் வைத்தியமுறையின் சாதக, பாதகத் தன்மைகளைகளைப் பேசும் 'அக்குபஞ்சர்', மலையகத்தில் ஹட்டன் பிரதேசத்தில் களிமண்ணால் மேற்கொள்ளப்படும் ஆபரணக் கைத்தொழில் தொடர்பான 'ரெரகொட்டா ஜீவல்ஸ்', முல்லைத்தீவு குமுளமுனை கிராமத்தில் இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்ட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரர்களின் கதையான 'கொலைக் களம்', நெடுங்கேணி ஊஞ்சல்கட்டிப் பிரதேசத்தில் நிகழ்ந்துவரும் யானை – மனித முரண்பாட்டை வெளிக்கொண்டு வரும் 'வேழம்', திருகோணமலையில் வெல்கம் விகாரை வழியான சிங்கள பௌத்த மயமாக்கத்தைச் சொல்லும் 'ஈழம்', மட்டக்களப்பு – கல்லடி பிரதேச பறங்கியர் சமூக மக்களின் வாழ்வியல் பற்றிய 'படிமம்', மஸ்கெலியா பிரதேச சபைக்கு உட்பட்ட கிராமங்களில் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சின் மூலம் முன்னெடுக்கப்பட்ட வீட்டுத் திட்டங்களில் மக்கள் எதிர்நோக்கும் சவால்களை விவரிக்கும் 'லயத்துக்குயில்', யுத்தத்தில் உடல் அங்கங்களை இழந்து சிரமத்தின் மத்தியில் அன்றாட வாழ்க்கையை வாழும் கேப்பாப்பிலவு கிராம மக்களின் பதிவான 'ரணம்', மயானங்களில் அவை சார்ந்து சேவை வழங்கும் சாதாரண மனிதர்களின் அன்றாட வாழ்வியல் சிக்கல்களைப் பதிவு செய்யும் 'அறியாப் பாதை' ஆகிய ஆவணப்படங்கள் திரையிடப்படவுள்ளன.



# இறக்கக்கண்டிக் கடலில் தொழிலுக்குச் சென்ற மீனவ இளைஞர் நேற்று நீரில் மூழ்கி உயிரிழப்பு!






திருகோணமலை குச்சவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இறக்கக் கண்டி கடல் பகுதியில் மீன் பிடிக்க சென்ற இளைஞன் ஒருவர் நீரில் மூழ்கிப் பலியானார் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்தச் சம்பவம் நேற்று இடம் பெற்றுள்ளது. இவ்வாறு உயிரிழந்தவர் இறக்ககக் கண்டி வாழை ஊத்துப் பகுதியை சேர்ந்த என்.அப்சான் (வயது 22) எனவும் தெரியவருகிறது.

உயிரிழந்தவரின் சடலம் தற்போது திருகோணமலை பொது வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப் பட்டுள்ளது. பிரேத பரிசோதனையின் பின் உறவினர்களிடம் சடலம் ஒப்படைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரனைகளை குச்சவெளி பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

# யாழ். சைவப்பிரகாச பேரவையினால் வல்லை கடல் நீர் ஏரி வலம் ஏற்பாடு




யாழ்ப்பாணத்தில் சைவப்பிரகாச பேரவையின் ஏற்பாட்டில் வல்லை கடல் நீர் ஏரி வலம் நடைபெறவுள்ளது.

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தின் கொடியேற்றத் திருவிழாவினை முன்னிட்டு நாளை 23 ஆம் திகதி காலை 6மணிக்கு வல்லை ஆஞ்சநேயர் ஆலயத்தில் இருந்து பால், பன்னீர்,கலச ஊர்வலம் ஆரம்பமாகவுள்ளது.

யாழ் ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் குறித்த விடயம் தொடர்பில் ஏற்பாட்டாளர்கள் தெளிவுபடுத்தினர்.

சந்நிதி முருகனை மனதிருத்தி வல்லை கடல் ஏரி வலம் வருவதால் நோய் நீக்கம், செல்வம், புத்திர பாக்கியம், துன்பங்கள் நீங்குதல் ஆகிய பலன்களை பெறலாம் என ஏற்பாட்டாளர்கள் மேலும் தெரிவித்தனர்.



# கொள்கை எதிரி பா.ஜ.க. அரசியல் எதிரி தி.மு.க.

## த.வெ.க. மதுரை மாநாட்டில் விஜய் உரை

மதுரையில் நடைபெற்ற த.வெ.க. 2 ஆவது மாநில மாநாட்டில், வரவிருக்கும் சட்டப்பேரவைத் தேர்தலில் தனது கட்சியின் கூட்டணி நிலைப்பாடு தொடங்கி கொள்கை எதிரி, அரசியல் எதிரி யார், கட்சியின் திட்டம் என்ன என்று பல்வேறு விடயங்கள் குறித்தும் அக்கட்சியின் தலைவர் விஜய் தெரிவித்துள்ளார்.

தமிழக வெற்றிக் கழகத்தின் 2 ஆவது மாநில மாநாடு நேற்று மதுரை மாவட்டம் பாரபத்தியில் நடைபெற்றது. இந்த மாநாட்டுக்கு லட்சக்கணக்கான தொண்டர்கள் திரண்ட நிலையில், மங்கல இசை, மதுரை மாநாட்டுக்கான சிறப்புப் பாடல் என்று கூட்டம் தொடங்கியது. இந்த மாநாட்டில் விஜய் உரையாற்றுகையில்,

“சினிமாவிலும், அரசியலிலும் எனக்கு மிகவும் பிடித்தவர் எம்.ஜி.ஆர். அவரோடு பழகும் வாய்ப்பு எனக்குக் கிடைக்கவில்லை ஆனால், அவருடைய குணம் கொண்ட இந்த மதுரை மண்ணில் பிறந்த விஜயகாந்த்துடன் பழகும் வாய்ப்பு கிடைத்தது. அவரை என்றும் மறக்க முடியாது. தவெகவின் அரசியல் உண்மையானது, உணர்வுப்பூர்மானது, நல்லவர்களுக்கானது, நாட்டு மக்களுக்கானது, நல்லதை மட்டுமே செய்யும் அரசியல்.

விக்கிரவாண்டி மாநாடு தமிழக அரசியலின் தட்பவெப்பத்தையே மாற்றியது. அதனைத் தொடர்ந்து இன்று இந்த மாநாட்டில் ஒலிக்கும் குரல் ஒற்றைக் குரல் அல்ல. ஒட்டுமொத்த தமிழர்களின் குரல். இந்தக் குரல் மாநில உரிமைக்காக, பெண்கள் நலனுக்காக, சமூக நீதிக்காக, சம உரிமைக்காக ஒலிக்கும் குரல். இதற்கு எதிராக எத்தனை கூக்குரல் வந்தாலும் ஓங்கி ஒலிக்குமே தவிர ஓயாது.

நான் கட்சியை ஆரம்பிக்கும் முன்னர் அத்தனை விமர்சனங்கள் எழுந்தன. அவரே ஆரம்பிக்கவில்லை, இவரா ஆரம்பிக்கப்போகிறார் என்றார்கள். அப்புறம் கட்சியை அறிவித்தவுடன். கட்சிதானே ஆரம்பித்திருக்கிறார் என்றார்கள். அப்புறம் மாநாடு நடத்தினேன். இப்போது இரண்டாவது மாநாடு நடக்கிறது. இப்போது கட்சி ஆரம்பித்தால், மாநாடு நடத்தினால் மட்டும் ஆட்சியைப் பிடித்துவிட முடியாது. ஆட்சியைப் பிடிப்பது ஈஸி இல்ல. ஷூட்டிங்கில் இருந்து வந்து ஆட்சியப் பிடிப்பாரா? என்றுசொல்கிறார்கள். இந்தக் கூட்டம் எப்படி ஓட்டா மாறும் என்று இன்னொரு பக்கம் விமர்சனம்,

என்னைப் பற்றிப் பேசும் அரசியல் ஆய்வாளர்களுக்கு நான் சொல்வது ஒன்றுதான். இந்தக் கூட்டம் ஆட்சியாளர்களுக்கு வேட்டா, நம்மள கோட்டைக்கு அனுப்பப்போகும் ரூட்டா மாறும். நான் அரசியலுக்கு வந்தது பெண்கள், பெண்குழந்தைகள், முதியவர்கள், ஆதரவற்றோர், மூன்றாம் பாலினத்தவர்கள், நெசவாளர்கள், விவசாயிகள், இளைஞர்கள் என எல்லோருக்கும் நல்லது செய்யவே.

நமது ஒரே கொள்கை எதிரி பா.ஜ.க, அரசியல் எதிரி தி.மு.க தான். நமக்கு, யாருக்காகவும் எதற்காகவும் எந்த பயமும் இல்லை. நாம் கூட்டணி வைத்து ஏமாற்றும் கட்சி கிடையாது. பாசிச பா.ஜ.கவுடன் உறவு வச்சுக்க நாமென்ன உலக மகா ஊழல் கட்சியா? நாம யார் தெரியுமா? இந்தியாவின் மாபெரும் சக்தி கொண்ட மகத்தான வெகுஜன மக்கள் படை.

நாம் எந்த அடிமைக் கூட்டணியிலும் சேர வேண்டிய அவசியமில்லை. ஒரு புறம் ஆர்.எஸ்.எஸ்-ஸிடம் அடிபணிந்து கொண்டு, இன்னொரு பக்கம் மதச் சார்பற்ற கூட்டணி என்று மக்களை ஏமாற்றும் கூட்டணி அமைப்பதெல்லாம் நாம் செய்வதில்லை. கூட்டணி பற்றி சஸ்பென்ஸ்லேயே சஞ்சாரம் செய்யுங்கள். 2026 தேர்தலில் த.வெ.க - தி.மு..க இடையே தான் போட்டி. அதனால், அலையன்ஸ வச்சு தப்பிச்சுடலாம்னு நினைக்குறவங்க கனவு ஒரு நாளும் மெய்ப்படாது. பாசிச பா.ஜ.க, பாய்சன் தி.மு.கவுக்கு எதிராக மக்கள் அரசியல் என்ற சவுக்கை கையில் எடுத்துள்ளோம்.

தமிழகத்தில் எம்.ஜி.ஆர் ‘மாஸ்’ தலைவர். தனது எதிரியைக் கூட கெஞ்ச வைத்தவர் எம்.ஜி.ஆர். ஆனால் அந்தக் கட்சியை இப்போது கட்டிக் காப்பது யார்? அது எப்படி இருக்கிறது. அந்தக் கட்சியின் அப்பாவி தொண்டர்கள் வேதனையில் தவிக்கிறார்கள். அதனால், என்ன வேஷம் போட்டுக் கொண்டு வந்தாலும் பா.ஜ.கவின் வித்தை இங்கே வேலைக்கு ஆகாது.

நான் நன்றிக்கடனுக்காக அரசியலுக்கு வந்துள்ளேன். 30 வருடங்களுக்கு மேலாக என்னை நீங்கள் தான் தாங்கிப் பிடிக்கிறீர்கள். உங்களுக்காக வருகிறேன். நான் உங்களை மறக்க மாட்டேன்.

ஒவ்வொரு வீட்டுக்குள்ளும் போன பின்னர்தான் கட்சியே ஆரம்பித்தேன். 2026 இல் கபட நாடக தி.மு.க. ஆட்சியை வீட்டுக்கு அனுப்புவேன். வரவிருக்கும் தேர்தலுக்கான வேட்பாளர் பட்டியலை நான் அறிவிக்கிறேன். மதுரை கிழக்கு விஜய், மதுரை மேற்கு விஜய், சோழ வந்தான் விஜய், உசிலம்பட்டி விஜய். என்னடா, எல்லா தொகுதிகளிலும் என் பெயரையே சொல்கிறேன் என நினைக்கிறீர்களா?

ஆம், 234 தொகுதிகளிலும் நான்தான் வேட்பாளர் என்று நினைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் த.வெ.கவின் வேட்பாளருக்கு வாக்களித்தால் அது எனக்கு வாக்களிப்பதாகும்.

நான் மக்களுக்காக உழைப்பதற்காக வந்துள்ளேன், எனக்கு இனி வேறு வேலை இல்லை. என் கடன் இனி மக்களுக்கு பணி செய்வதே. மக்களை நேசிக்கும் நான், மக்களுக்காக வருகிறேன். ஒரு அரசியல் தலைவன் உண்மையானவனாக இருக்க வேண்டும். நான் உண்மையான அரசியல்வாதியாக உங்களுக்காக வருகிறேன்.

என்னை சினிமாக்காரன் என்று சொல்கிறார்கள். எல்லா சினிமாக்காரனும் முட்டாள் கிடையாது , எல்லா அரசியல்வாதியும் அறிவாளியும் கிடையாது. இங்கே, அம்பேத்கரை, நல்ல கண்ணுவை, காமராஜரை தோற்கடித்தது அரசியல்வாதிதான், சினிமாக்காரன் அல்ல. நான் மக்களுக்கான நல்ல அரசியல்வாதி.” என்றார்.

தொடர்ச்சி ▼

# கொள்கை எதிரி பா.ஜ.க. அரசியல் எதிரி தி.மு.க.

தொடர்ச்சி▲
















## குடியரசு துணைத் தலைவர் தேர்தல்:

# இண்டியா கூட்டணி வேட்பாளர் சுதர்சன் ரெட்டி வேட்புமனு தாக்கல்

குடியரசு துணைத் தலைவர் தேர்தலில் இண்டியா கூட்டணி சார்பில் அறிவிக்கப்பட்ட வேட்பாளரான ஓய்வு பெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதி சுதர்சன் ரெட்டி நேற்று வேட்புமனு தாக்கல் செய்தார்.

காங்கிரஸ் தலைவரும் மாநிலங்களவை எதிர்க்கட்சித் தலைவருமான மல்லிகார்ஜுன கார்கே, காங்கிரஸ் நாடாளுமன்றக் கட்சித் தலைவர் சோனியா காந்தி, மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி, என். சி.பி-எஸ்.சி.பி தலைவர் சரத் பவார், சமாஜ்வாதி கட்சியின் எம்.பி. ராம் கோபால் யாதவ், தி.மு.க. எம்..பி திருச்சி சிவா, சிவசேனா எம்.பி. சஞ்சய் ராவத் உள்ளிட்ட இண்டியா கூட்டணி தலைவர்கள் பலரும் இதில் கலந்து கொண்டனர்.

வேட்புமனு தாக்கலுக்கு முன் பேசிய சுதர்சன் ரெட்டி,

“போதிய எண்ணிக்கை உள்ளதா என்ற கேள்வி தொடர்கிறது. எனினும், நம்பிக்கை உள்ளது. நான் எந்த ஒரு அரசியல் கட்சியையும் சார்ந்தவன் அல்ல. எனவே, ஒவ்வொருவரும் எனக்கு ஆதரவு அளிக்க முடியும் என நம்புகிறேன். நேற்றே ஒரு விடயத்தை நான் தெளிவுபடுத்திவிட்டேன். இது ஒரு சித்தாந்த போர். இன்றைய நிகழ்ச்சியைப் பொறுத்தவரை அது மிகவும் எளிமையானது. தேர்தல் நடத்தும் அதிகாரியை சந்திக்கிறேன். வேட்புமனு தாக்கல் செய்கிறேன்.” என தெரிவித்திருந்தார்.

# திருப்பூர் ரிதன்யா தற்கொலை வழக்கு: கணவர், மாமனார், மாமியாருக்கு பிணை



திருப்பூர் ரிதன்யா தற்கொலை வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள அவரது கணவர் மற்றும் மாமனார் மாமியாருக்கு நிபந்தனை பிணை வழங்கி சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

திருப்பூர் மாவட்டம், அவிநாசியில் வரதட்சணை கொடுமை காரணமாக புதுமணப் பெண் ரிதன்யா விஷம் அருந்தி தற்கொலை செய்து கொண்ட வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள கணவர் கவின்குமார், மாமனார் ஈஸ்வர மூர்த்தி, மாமியார் சித்ரா தேவி ஆகியோர் பிணை கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுக்கள் தாக்கல் செய்திருந்தனர். இந்த மனுக்களை விசாரித்த உயர் நீதிமன்றம், ரிதன்யாவின் முழுமையான உடற்கூராய்வு, தடயவியல் ஆய்வு அறிக்கைகளை தாக்கல் செய்ய உத்தரவிட்டிருந்தது.

இந்நிலையில், இந்த மனுக்கள் நீதிபதி ஜி.ஜெயச்சந்திரன் முன் நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள் தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர், திருமணத்திற்கு முன்பே ரிதன்யா தற்கொலை மன நிலையில் இருந்திருக்கிறார். திருமணத்தில் அவருக்கு விருப்பமும் இல்லை. வரதட்சணை துன்புறுத்தல் ஏதும் நடைபெறவில்லை என்பதால் பிணை வழங்க வேண்டும் என வாதிட்டார்.

விசாரணை நிலைகுறித்த அறிக்கையை தாக்கல் செய்த பொலிஸ் தரப்பு வழக்கறிஞர், ரிதன்யாவின் குரல் பதிவு தடயவியல் ஆய்வுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும், அதன் அறிக்கைக்கு காத்திருப்பதாகவும் தெரிவித்தார். ரிதன்யாவை துன்புறுத்தியதற்கு ஆதாரங்கள் உள்ளன என்றும் மனுதாரர்கள் செல்வாக்கானவர்கள் என்பதால் பிணை வழங்கினால் சாட்சிகளை கலைக்க வாய்ப்புள்ளதாக சுட்டி காட்டினார்.

இரு தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி, வழக்கு தொடர்பாக ஏற்கெனவே ஆர்.டி.ஓ. விசாரணை நடத்தப்பட்டுள்ளது. முக்கிய சாட்சிகளிடம் விசாரணையும் முடிவடைந்து விட்டது என்பதால் மனுதாரர்களை சிறையில் வைத்திருக்க அவசியம் இல்லை எனக் கூறி மூவருக்கும் பிணை வழங்கி உத்தரவிட்டார். அடுத்த உத்தரவு பிறப்பிக்கும் வரை தினமும் காலை மற்றும் மாலை நேரங்களில் சம்பந்தப்பட்ட பொலிஸில் ஆஜராகி கையெழுத்திட வேண்டும் என்றும் பொலிஸாரின் விசாரணைக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் சாட்சிகளை கலைக்க முயற்சிக்கக் கூடாது என்றும் மூவருக்கும் நீதிபதி நிபந்தனை விதித்துள்ளார்.

மேலும் தலா ஒரு லட்சம் ரூபாவுக்கான இரு நபர் பிணையை அவிநாசி நீதிமன்றத்தில் செலுத்த வேண்டும் என்று உத்தரவிட்ட நீதிபதி, அவிநாசி நீதிமன்றத்தின் அனுமதி இல்லாமல் மாநிலத்தை விட்டு வெளியேறக் கூடாது என்றும் கடவுச்சீட்டை ஒப்படைக்க வேண்டும் என்றும் நிபந்தனை விதித்துள்ளார்.

# உக்ரைனில் 3 கிராமங்களை கைப்பற்றியது ரஷ்ய படை






கிழக்கு உக்ரைனில் மூன்று கிராமங்களைக் கைப்பற்றியதாக ரஷ்ய இராணுவம் அறிவித்துள்ளது.

அமெரிக்கா தலைமையிலான அமைதி முயற்சிகள் மற்றும் மோதலை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான இராஜதந்திர நடவடிக்கைகள் இருந்தபோதிலும் இந்த ஆக்கிரமிப்பு நடைபெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரஷ்யாவின் பாதுகாப்பு அமைச்சு அதன் துருப்புக்கள் போரிடும் டொனெட்ஸ்க் பகுதியில் எதிரிகளின் பாதுகாப்புக்குள் ஆழமாக முன்னேறி, சுகெட்ஸ்கே மற்றும் பன்கிவ்கா கிராமங்களைக் கைப்பற்றியதாகக் தெரிவித்துள்ளது.

டினிப்ரோபெட்ரோவ்ஸ்க் பிராந்தியத்தில், நோவோ ஜோர்கிவ்கா கிராமத்தைக் கைப்பற்றியுள்ளதாகவும் ரஷ்ய இராணுவம் குறிப்பிட்டுள்ளது.




# மிகப்பெரிய வான் தாக்குதலை உக்ரைன் மீது நடத்தியது ரஷ்யா

ரஷ்யா இந்த ஆண்டின் மிகப்பெரிய வான்வழித் தாக்குதல்களில் ஒன்றை உக்ரைன் மீது ஒரே இரவில் நடத்தியுள்ளது.

574 ட்ரோன்கள் மற்றும் 40 பாலிஸ்டிக் மற்றும் க்ரூஸ் ஏவுகணைகளை உக்ரைன் மீது ஏவப்பட்டன என்று அந்நாட்டு விமானப்படை தெரிவித்துள்ளது.

இந்தத் தாக்குதல்கள் பெரும்பாலும் மேற்குப் பகுதிகளை குறிவைத்வை என உக்ரைன் தரப்புக்கள் விளக்கியுள்ளன.

தாக்குதல் இடம்பெற்ற பிரதேசமானது மேற்கத்திய நாடுகள் வழங்கும் இராணுவ உதவிகள் சேமித்து விநியோகிக்கப்படும் பகுதி என கூறப்படுகிறது.

இது இந்த ஆண்டு ரஷ்யாவின் மூன்றாவது பெரிய ட்ரோன் தாக்குதலாகவும், எட்டாவது பெரிய ஏவுகணை தாக்குதலாகவும் கருதப்படுகிறது.

ட்ரோன் தொழிற்சாலைகள், கிடங்குகள் மற்றும் ஏவுகணை ஏவுதளங்கள் உட்பட உக்ரேனிய இராணுவ - தொழில்துறை வளாகத்தின் நிறுவனங்களை குறிவைத்ததாக ரஷ்யா கூறியிருந்தாலும், இதுபோன்ற பெரும்பாலான தாக்குதல்கள் பொதுமக்கள் பகுதிகளைத் தாக்கியுள்ளன.

சேதமடைந்த வசதிகளில் உக்ரைனின் ஹங்கேரி எல்லைக்கு அருகில் அமெரிக்காவிற்குச் சொந்தமான மின்னணு தொழிற்சாலையும் அடங்கும் என கூறப்படுகிறது.

மேலும், உக்ரைனில் உள்ள அமெரிக்க வர்த்தக சபையின் தலைவர் ஆண்டி ஹண்டர், நாட்டின் மிகப்பெரிய அமெரிக்க முதலீடுகளில் ஒன்றான ஃப்ளெக்ஸ் தொழிற்சாலை 600 இரவு நேரப் பணியாளர்கள் இருந்தபோது தாக்கப்பட்டதாகக் கூறியுள்ளார்.

மேலும், ஆறு பேர் காயமடைந்தனர் என தெரிவித்துள்ளார்.

# இன்றைய ராசி பலன்கள் -22.08.2025




இன்று உங்களிடம் தன்னம்பிக்கை நிறைந்து காணப்படும். உங்கள் இலக்குகளை அடைவதற்கும் உங்கள் முயற்சிகளில் வெற்றி பெறுவதற்கும் தேவையான உறுதி மற்றும் தைரியம் உங்களிடம் காணப்படும்.

பணிகளை குறித்த நேரத்திற்கு முன்பே முடித்து விடுவீர்கள். இதனால் உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெற முடியம்.

உங்கள் துணையுடன் இனிமையான வார்த்தைகளை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் உங்கள் துணையுடன் நல்ல பிணைப்பு ஏற்படும்.

இன்று பணப்புழக்கம் அதிகமாக இருக்கும். வங்கியிருப்பை சிறப்பாக பராமரித்து திருப்தி அடைவீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்களிடம் நம்பிக்கை நிறைந்து காணப்படும்.




இன்று மந்தமான நிலை காணப்படும். உங்கள் செயல்களில் விழிப்புணர்வு தேவை. இன்று நன்மை காண திட்டமிட்டு செயல்பட வேண்டும்.

இன்று உங்கள் பணிகளை கையாளும்போது சவால்களை சந்திக்க நேரும்.

மனக் குழப்பம் காரணமாக உங்கள் துணையுடன் தவறான புரிந்துணர்வு காணப்படும். தேவையற்ற வாக்குவாதங்கள் எழ வாய்ப்புள்ளது. எனவே இத்தகைய உணர்வை தவிர்க்க வேண்டும்.

பண இழப்பு காணப்படுகின்றது. பணத்தை கையாளும் போது கவனம் தேவை.

இன்று தலைவலி ஏற்பட வாய்ப்புள்ளது. தியானம் மேற்கொள்வதன் மூலம் குணம் பெறலாம்.




உங்களுக்கு கவலை அளிக்கும் வகையிலான சூழ்நிலைகள் இன்று காணப்படும். உணர்ச்சிக் கட்டுப்பாட்டை பராமரித்தலும் சமநிலையோடு இருத்தலும் நல்ல பலனளிக்கும். குடும்பத்துடன் வெளியிடங்களுக்கு சென்று ஓய்வெடுங்கள்.

பணிகள் இறுக்கமாக காணப்படும். பணியில் சிறப்பான பலன்களைப் பெற சமயோசித புத்தியுடன் செயல்பட வேண்டும்.

உங்களிடம் பதற்றமான மனநிலை காணப்படும். அதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இதனால் உறவில் முரண்பாடு காணப்படும். உறவில் நல்லிணக்கம் ஏற்படுத்த நீங்கள் இந்த உணர்வுகளை கட்டுபடுத்த வேண்டும்.

பணப்புழக்கம் போதிய அளவு காணப்படாது. இது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும். சேமிக்கும் வாய்ப்பும் குறைவு.




இன்று வெற்றிகரமான பலன்கள் காணப்படும். இதனால் உங்கள் பணிகளை எளிதாக ஆற்ற இயலும். கவனம் மற்றும் உறுதியுடன் செயல்பட்டால் உங்கள் வளர்ச்சி மேம்படும்.

பணியிடத்தில் முன்னேற்றகரமான பலன்கள் காணப்படும். நீங்கள் தன்னிச்சையாகவும் திறமையுடனும் செயலாற்றுவீர்கள்.

இன்று நீங்கள் உங்கள் துணையுடன் மகிழ்ச்சியோடு உணர்வுகளை பகிர்ந்து கொள்ள விரும்புவீர்கள். இதனால் நல்ல புரிந்துணர்வை வளர்த்துக் கொள்ள இயலும்.

நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். வங்கியில் சேமிப்பு அதிகரிக்கும். இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்களின் மன வலிமை காரணமாக நீங்கள் ஆரோக்கியமாக இருப்பீர்கள்.




உங்கள் வளர்ச்சியை மேம்படுத்தும் வகையில் சாதகமான பலன்கள் காணப்படும். கடினமான பணிகளையும் எளிதாக முடிப்பீர்கள். இன்று முக்கிய முடிவுகளை எடுக்கலாம்.

நீங்கள் உங்கள் பணிகளை நேர்மையுடன் ஆற்றுவீர்கள். இதனால் உங்கள் திறமை மேம்படும்.

உங்கள் துணையுடன் வெளிப்படையாகப் பழகுவீர்கள். இந்த அணுகுமுறை காரணமாக நல்லிணக்கம் மேம்படும்.

பூர்வீகச் சொத்து மூலமாக இன்று பண வரவு காணப்படுகின்றது. கடன் வாங்குவதற்கான வாய்ப்பு உள்ளது. கையிலுள்ள பணத்தை கொண்டு அதிக பணம் சம்பாதிக்கும் வாய்ப்பு உள்ளது.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்கள் மனதில் நம்பிக்கை உணர்வு காணப்படும்.




இன்று எல்லா செயல்களிலும் யதார்த்தமான அணுகுமுறை மேற்கொள்வது நல்லது. உங்கள் இலக்குகளை முடிப்பதில் சில கடினங்கள் காணப்படும். மனதை அமைதியாக வைத்து கவனமுடன் செயற்பட்டால் நன்மை விளையும்.

நிலுவையில் உள்ள பணிகள் உங்களுக்கு கவலை அளிக்கும். உங்கள் பணிகளை திட்டமிட்டு ஒழுங்குமுறைபடுத்தி செயலாற்ற வேண்டும்.

உங்கள் மனதில் ஏற்படும் சஞ்சலமான எண்ணங்களை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவதன் மூலம் நல்லிணக்கம் குறையும். நல்லுறவை பராமரிக்க உணர்ச்சிகளை கட்டுபடுத்தி நட்புடன் உணர்வுகளைப் பகிர வேண்டும்.

நிதிநிலைமையில் காணப்படும் ஏற்ற இறக்கம் மனதுக்குக் கவலை அளிக்கும். உங்கள் செலவுகளை கட்டுப்படுத்துவதை கடினமாக உணர்வீர்கள். பணச்சுமையை உணர்வீர்கள்.

சளி மற்றும் தோல் சம்பந்தமான பிரச்சினையால் பாதிக்கப்படலாம். உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.




இன்று முன்னேற்றகரமான பலன்கள் காணப்படும். முன்னேற்றம் பெறுவதற்கான வலிமையையும் உற்சாகமும் உங்களிடம் காணப்படும். இன்று அனைத்து விதத்திலும் செழிப்பாக இருக்கும்.

புதிய வாய்ப்புகளால் உற்சாகமும் திருப்தியும் காணப்படும். இன்று விருப்பமான பலன்கள் கிடைக்க சாதகமான நாள் அல்ல. என்றாலும் உங்கள் புத்திசாலித்தனத்தை மேம்படுத்தும் புதிய திறமைகளை கற்கலாம். நண்பர்கள் உங்கள் நம்பிக்கைக்கு புறம்பாக நடக்கலாம் என்பதால் அவர்களிடம் கவனமாக இருக்கவும்.

பணிகள் சலிப்பைத் தருவதாக இருக்கும். இது உங்களுக்கு சோர்வை அளிக்கும். உங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பதை நீங்கள் கடினமாக உணர்வீர்கள்.




இன்று உங்களிடம் மகிழ்ச்சியான எண்ணங்களும் செயல்களும் காணப்படும். தியானம் மேற்கொள்வதன் மூலம் நீங்கள் அமைதி காணலாம்.

புதிய வேலை வாய்ப்புகள் உங்களுக்கு உற்சாகத்தை அளிக்கும். நீங்கள் உங்கள் பணிகளை இனிமையான சூழ்நிலையில் மகிழ்ச்சியாக செய்வீர்கள்.

உங்கள் துணையிடம் நேர்மையான உணர்வுகளை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் இருவரும் ஒருவரையொருவர்நன்கு புரிந்து கொள்ள இயலும்.

இன்று நிதிநிலைமை ஸ்திரமாக இருக்கும். உங்கள் நிதியை வளமாக்க இன்று நீங்கள் சேமிக்கும் திட்டங்களில் பங்கு கொள்வீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்களின் மனதைரியம் காரணமாக இது சாத்தியமாகும்.

# இன்றைய ராசி பலன்கள் -22.08.2025




இன்று உங்களுக்கு விருப்பமான பலன்கள் கிடைக்காது. உங்கள் இலக்குகளை அடைய நீங்கள் போராட வேண்டியிருக்கும். இன்று நீங்கள் அதிகம் எதிர்பார்க்க இயலாது.

அதிகப் பணிகள் காரணமாக கவலை ஏற்படும். உங்கள் பணிகளை திட்டமிட்டு அதன்படி ஆற்றவும்.

நகைச்சுவை பேச்சின் மூலம் நீங்கள் உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வை உருவாக்க இயலும். உங்கள் கருத்துகளை வெளிப்படையாக பகிர்ந்து கொள்வதன் மூலம் உறவில் அனுசரணை காணப்படும்.

நிதி நிலைமை சிறப்பாக இருக்காது. இன்று அதிக செலவுகள் காணப்படும்.

உங்கள் தாயின் ஆரோக்கியத்துக்காக பணம் செலவு செய்ய நேரும். இது உங்களுக்கு வருத்தம் அளிக்கும். தகுந்த சிகிச்சையும் மருந்தும் அவரை குணப்படுத்தும்.




இன்று எல்லா செயல்களிலும் பொறுமை கடைபிடிக்க வேண்டும். இன்று வாக்குவாதம் எழ வாய்ப்புள்ளதால் பிறருடன் பேசும் போது கவனம் தேவை. முக்கிய முடிவுகள் எடுப்பதைத் தவிர்க்க வேண்டும்.

இன்று அதிகப் பணிகள் காணப்படும். உங்கள் பணிகளை மேற்கொள்ளும்போது நீங்கள் மிகவும் பொறுமை காக்க வேண்டியது அவசியம்.

உங்களின் குழப்பமான உணர்வுகள் காரணமாக உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். உங்கள் துணையுடன் நட்போடு அணுகுவதன் மூலம் உங்கள் இருவருக்கும் இடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

அஜாக்கிரதை மற்றும் கவனக்குறைவு காரணமாக இன்று பண இழப்பு காணப்படுகின்றது.

இன்று தலைவலி ஏற்பட வாய்ப்புள்ளது. தியானம் மேற்கொள்வது சிறந்தது.




இன்று மந்தமான நாளாக இருக்கும். கையாள்வதற்கு கடினமான கட்டுப்பாடற்ற சூழ்நிலை காணப்படும்.இதனை சமாளித்து உறுதியுடன் அடுத்த கட்டத்திற்கு நீங்கள் செல்ல உறுதி செய்து கொள்ளுங்கள்.

சரியான நேரத்தில் பணிகளை முடிக்க இயலாது. தாமதங்கள் காணப்படும். இதனால் பணிகள் நிலுவையில் இருக்கும்.

நீங்கள் உங்கள் துணையுடன் இணைந்து நேரம் செலவழிப்பதன் மூலம் நல்லுறவு வளரும். இருவரும் ஒன்றாக பொழுதுபோக்கு நிகழ்சிகளில் கலந்து கொள்வது சிறந்தது.

பணத்தை கையாளும்போது அஜாக்கிரதையாக மற்றும் கவனக் குறைவாக இருந்தால் இன்று பண இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது.

இன்று தலைலிவலி ஏற்பட வாய்ப்புள்ளது. பதட்டத்தை தவிர்த்து தியானம் மேற்கொண்டு அமைதியாக இருக்க முயலுங்கள்.




இன்று நீங்கள் தன்னிச்சையாகவும் நம்பிக்கையுடனும் செயல்படுவீர்கள். இதனால் நீங்கள் வெற்றி பெறுவீர்கள். உங்களுக்கு கிடைக்கும் புதிய வாய்ப்புகளில் மகிழ்ச்சியடைவீர்கள்.

பணி நிமித்தமான பயணம் இன்று சாத்தியம். இன்று நீங்கள் பணிகளை விரைவாகவும் திறமையாகவும் முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு செல்வதன் மூலம் நெருக்கம் அதிகரிக்கும். இது திருப்தி அளிக்கும். இதனால் இருவரும் ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொள்ள முடியம்.

நிதிநிலைமை சிறப்பாகவும் திருப்திகரமாகவும் இருக்கும். உங்கள் வங்கியிருப்பு அதிகரிப்பதை காண்பீர்கள்.

இன்று நீங்கள் ஆரோக்கியமாக இருப்பீர்கள். நீங்கள் ஆரோக்கியத்தைத் திடமாக பராமரிப்பீர்கள்.

# முன்னாள் எம்.பி. டயனா கமகேவை கைது செய்ய பிடியாணை உத்தரவு

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் டயனா கமகேவை கைது செய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறு கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றம் நேற்று பிடியாணை பிறப்பித்துள்ளது.

குடிவரவு – குடியகல்வு திணைக்கள சட்டத்தை மீறி போலி தகவல்களை முன்வைத்து கடவுச்சீட்டை பெற்றுக்கொண்டமை மற்றும் செல்லுபடியான விசா இன்றி இலங்கையில் தங்கயிருந்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளின் கீழ் அவருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது அவர் நீதிமன்றத்தில் ஆஜராகியிருக்கவில்லை.

சந்தேகநபரை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்துமாறு கொழும்பு பிரதம நீதவான் தனுஜா லக்மாலி ஜயதுங்க உத்தரவு பிறப்பித்துள்ளார்.

குடிவரவு – குடியகல்வு திணைக்கள சட்டத்தை மீறி விசா இன்றி நாட்டில் தங்கியிருந்தமை தொடர்பில் குற்றப் புலனாய்வு திணைக்களத்தினால் தாக்கல் செய்யப்பட்ட 7 வழக்குகளின் சாட்சி விசாரணைகள் நேற்று எடுத்துக் கொள்ளப்படவிருந்தது.



வழக்கின் சாட்சியாளர்களாக குடிவரவு – குடியகல்வு திணைக்களத்தின் நிர்வாகப் பணிப்பாளர் நாயகத்தின் பிரதிநிதி, மேல் நீதிமன்றத்தின் வழக்கு பொருள்களுக்கான அறையின் பொறுப்பதிகாரி மற்றும் வழக்கின் முதல் சாட்சியாளர் ஆகியோர் நேற்று நீதிமன்றததில் ஆஜராகயிருந்தனர்.